# இலங்கையின் நீண்டகால இலவசக் கல்வியின் பாரம்பரியத்திற்கு தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பு அச்சுறுத்தலாக உள்ளது!

## யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு!

தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பானது (NEPF) இலங்கையின் நீண்டகால இலவசக் கல்வியின் பாரம்பரியத்திற்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக உள்ளது!, என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் (குருவுயு) என்ற வகையில், இலங்கை அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட தேசியக் கல்விக் கொள்கைக் கட்டமைப்பை (ரேநீகு 2023–2033) நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்! இது நமது நாட்டின் நீண்டகால இலவசக் கல்வி பாரம்பரியத்திற்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக உள்ளது. கல்வியில் அரசின் பொறுப்பைத் திரும்பப் பெறுதல், அரச கல்விக்கான ஒதுக்கீடுகளை கைவிடுதல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைகுழுவை (UGC) ஒழித்தல் போன்றவற்றை முன்னிலைப்படுத்தி NEPF திட்டம்

2➤



# மாலைக்கதிர்

Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 27 செவ்வாய்க்கிழமை 09.04.2024 கதிர் 224



## அரிசியின் விலையைக் குறைக்கவேண்டும்!

### வடக்கு–கிழக்கு பெண்கள் கூட்டமைப்பினர் சாவகச்சேரியில் கவனவீர்ப்புப் போராட்டம்

அரசானது அரிசியின் விலையை நூறு ரூபாய்க்கு கீழே குறைக்க வேண்டும் என வலியுறுத்தி வடக்கு - கிழக்கு பெண்கள் கூட்டமைப்பினர் இன்று செவ்வாய்க்கிழமை காலை சாவகச்சேரியில் கவனவீர்ப்பு

2➤

## மைத்ரிபால மீது நம்பிக்கை வைத்திருந்தேன் ஆனால் அவர் கட்சியை சீர்குலைத்து விட்டார்!

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நிரந்தரமாக மீளக்கட்டியெழுப்பும் நோக்கில், கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கட்சியின் போசகரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அறிவித்தார்.



நேற்று (08) இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் கட்சியையும் நாட்டையும் அழிவை நோக்கி இட்டுச் சென்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2➤

## ஸ்ரீ. சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் சட்டபூர்வமற்றது!

### தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு




நேற்றைய தினம் (08) நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் சட்டபூர்வமானது அல்ல, அது கட்சியின் அரசியலமைப்பிற்கும் எதிரானது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். நேற்று சுதந்திரக் கட்சியின் கட்சி குழுக் கூட்டம்

2➤

## வேலையற்றோர் எண்ணிக்கை 9 இலட்சமாக அதிகரிப்பு பாடசாலைக்கு செல்லாதோர் எண்ணிக்கை 5 இலட்சம்!

### இது செயற்கையாக உருவாக்கப்பட்ட அரசு என்கிறார் பீரிஸ் எம்.பி.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்துறை வீழ்ச்சியின் காரணமாக வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 09 இலட்சமாக அதிகரித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.



வறுமை காரணமாக பாடசாலைக்கு செல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை 05 இலட்சமாகவும், சிறார் போசாக்கு குறைபாடு 27 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவினால் எழுதப்பட்ட 'இராகளுவர' என்ற நூலின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் 'உலக வங்கியின் அறிக்கையின்படி நமது நாட்டில் 57 லட்சம் பேர் வறுமையில்

2➤

## தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்க நாளை வரை கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது!

*தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்ப காலம் நாளை வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

*2021 ஆம் மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான உயர்தப்பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் மாணவர்கள், தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.*

*இதற்கமைய, கடந்த 5 ஆம் திகதி முதல் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில், நாளை வரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.*

*அத்துடன், குறித்த காலப்பகுதிக்குள் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், தமது விண்ணப்பங்களில் திருத்தங்களைச் செய்ய வேண்டுமாயின், எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி நள்ளிரவு வரை மாத்திரம் அதற்கான அவகாசம் வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.*

*(04)*

## இலங்கைக்கு அமெரிக்கா வழங்கும் உளவு விமானம்! கடற்பரப்பில் கண்காணிப்பை மேற்கொள்ளுமாம்

இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு உளவு விமானமொன்று வழங்கப்படவுள்ளது.

ஊநுஉா முலைபெயுசை 360நசரகத்தை சேர்ந்த இந்த புதிய விமானம் எதிர்வரும் ஜ"ன் அல்லது ஜ"லை மாதத்திற்குள் இலங்கையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. இதேவேளை, வான்வழியாக கடல்சார் கண்காணிப்பை மேற்கொள்ளும் திறன் கொண்ட அமெரிக்க பாதுகாப்பு படைகளுக்கு சொந்தமான இடைமறிப்பு விமானமொன்று கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு அமெரிக்காவினால் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த விமானம் செலஞ்சர் 605 ரக கண்காணிப்பு விமானமாகும். இது இலங்கையின் விமானப்படை விமானிகள் உட்பட முப்படை அதிகாரிகளுக்கும் பயிற்சிகளை வழங்க பயன்படுத்தப்படுகின்றது. மேலும், முப்படையைச் சேர்ந்த பத்து அதிகாரிகள் அடுத்த சில மாதங்களில் பயிற்சிக்காக அமெரிக்கா செல்லவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ரெசி-34)

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கல்வி முறையை முழுவதுமாக லாபம் ஈட்டும் வணிகமாக மாற்றுகிறது. இந்த சீர்திருத்தங்கள் கல்வியின் தரம் மற்றும் மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களின் நலனை விட லாபத்தை முதன்மைப்படுத்துகின்றன.

பல்கலைக்கழக மட்டத்தில் கட்டண விதிப்புகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும், உயர்கல்விக்கான அரச நிதியை திரும்பப் பெறுவதன் மூலமும், சுதந்திரத்திற்குப் பிறகு இலங்கையின் சமூக கட்டமைப்பில் மையமாக இருந்த கல்விக்கான சம அணுகல் கொள்கையை தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பானது குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

மேலும், தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பானது பொருளாதாரம் சார்ந்த பாடங்கள் மற்றும் டிஜிட்டல் மீது கவனம் செலுத்துகிறது. கல்வியறிவு விமர்சன சிந்தனை மற்றும் குடியுரிமை போன்ற கல்வியின் பரந்த இலக்குகளை அது புறக்கணிக்கிறது. சமூக ஏற்றத்தாழ்வுகளை நிலைநிறுத்துகிறது.

இந்த குறுகிய அணுகுமுறை தற்போதுள்ள வர்க்கப்பிளவுகளை ஆழப்படுத்தவும் சமூக ஏற்றத்தாழ்வுகளை நிலைநிறுத்தக் கூடியவகையிலும் அச்சுறுத்துகிறது.

முன்மொழியப்பட்ட கட்டமைப்பானது, கல்விக்கான நியாயமான அணுகல் மற்றும் கல்வியின் தரத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் பேணுதல் ஆகியவற்றிற்கான பொறுப்பை வழங்குவதற்கான பல்வேறு உடன்படிக்கைகளுக்கான இலங்கையின் சர்வதேச கடமைகளை மீறுகிறது. மாறாக, முன்மொழியப்பட்ட கொள்கையானது இலவச கல்வியின் முற்றுப்புள்ளியாக செயற்படும்.

மக்களின் செலுத்தும் திறனை பொருட்படுத்தாமல் குடிமக்கள் என்ற வகையில் பெறுவதற்கான உரிமையை பறிக்கிறது. தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பு நிர்வாகம், நிதி, தர உத்தரவாதம் ஆகியவற்றில் அரசின் பங்கை கடுமையாக மாற்றுகிறது.

இந்த சவால்களுக்கு விடையிறுக்கும் வகையில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனமானது, தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்புக்கான எதிர்ப்பைத் திரட்டி, இலங்கையில் இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்காக மாணவர் சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் உட்பட பிற பங்குதாரர்களுடன் இணைந்து செயல்படும்.

அரசாங்கம் தனது முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களைத் திரும்பப் பெறவும், சந்தை சக்திகளை விட மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் சமூகத்தின் அனைத்து ஒத்த எண்ணம் கொண்ட பிரிவுகளுடன் சேர்ந்து, தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கும்.

இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்காக நாங்கள் தொடர்ந்து வாதிடுகையில், இந்த முக்கியமான போராட்டத்தில் எங்களுடன் சேருமாறு அனைத்து குடிமக்களையும் அழைக்கிறோம்.

அனைத்து இலங்கையர்களும் அவர்களின் பின்னணி மற்றும் சமூகப் பொருளாதார நிலைகளை கடந்து, எல்லோரும் சேர்ந்து கல்வி அடிப்படை உரிமையாக இருப்பதை உறுதி செய்யலாம். இறுதியாக, கல்வி போன்ற இன்றியமையாத விடையங்களின் கொள்கை வகுப்பதை ஜனநாயகத்தின் கேலிக்கூத்தாக மாறவிடக்கூடாது என்பதை வலியுறுத்தி, இந்த திட்டத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் கடுமையாகக் கோருகிறது - என்று இந்த ஊடகச் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. (01,04)

## அரிசியின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

சாவகச்சேரி பஸ் தரிப்பு நிலையம் முன்பாக இடம்பெற்ற மேற்படி போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள், "அரிசியின் விலையேற்றத்தால் பசியில் வாடுகிறோம், நிறுத்து நிறுத்து வளச் சுரண்டல்களை நிறுத்து!, பொருளாதாரச் சுமையைக் குறை, ஏழையின் வயிற்றில் அடிக்காதே, பட்டினிச் சாவு வேண்டாம், பிள்ளைகளை பசியால் வாட்டாதே!" உள்ளிட்ட சுலோகங்களை ஏந்தியவாறு கவனயீர்ப பில் ஈடுபட்டிருந்தனர். (01)

## மைத்திரியால......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் அவர் தெரிவிக்கையில் "2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுமாறு அனைவரும் என்னிடம் கூறினார்கள். ஆனால் அதனை மறுத்த நான், பெரும் எதிர்பார்ப்புக்களுடன் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவை போட்டியிடச் செய்தேன். ஆனால், மைத்திரிபால சிறிசேன கட்சி அரசியலமைப்பை முற்றாகக் குழப்பிவிட்டார். என்னை கட்சியிலிருந்து நீக்கியதாகவும், பின்னர் மீண்டும் நீக்கவில்லை எனவும் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அவர் உண்மையிலேயே அவர் ஒரு பைத்தியம்" என்றார். (ரெசி-31)

## வேலையற்றோர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது, இந்த நிலையில் இந்த அரசாங்கம் எந்தவகையிலும் மனசாட்சியின்படி நடக்கவில்லை, இதனால் மக்கள் மிகவும் அநாதரவாகிவிட்டனர்' என குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கம் மக்களால் உருவாக்கப்படவில்லை மாறாக இது செயற்கையாக உருவாக்கப்பட்ட அரசாங்கம், இதனால் சமூகத்தின் ஒருமித்த கருத்து முற்றாக மீறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தலை நடத்துவது தொடர்பான அறிக்கைகளை வெளியிடுவதற்கு ஜனாதிபதிக்கோ அல்லது ஜனாதிபதி செயலகத்திற்கோ அதிகாரம் இல்லை, முழு அதிகாரமும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே உள்ளது, ஜனாதிபதி தேர்தலை செப்டெம்பர் 17 ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 17 ஆம் மாதத்திற்கும் இடையில் நடத்த வேண்டும் எனவும் ஜீ .எல் .பீரிஸ் எம்.பி. தெரிவித்தார். (ரெசி-33)

## ஸ்ரீ சுதந்திரக்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்றமை தொடர்பில் கருத்து கூறும் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் இந்த சட்டவிரோத அரசியல் குழுக் கூட்டம் கட்சி அரசியலமைப்பின் ஆளுமையையும்கடுமையாக சேதப்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த கூட்டத்தில் கட்சியின் செயலாளர் பங்கேற்கவில்லை, கட்சித் தலைவரின் சேவை நீதிமன்றத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ளது எனவே, இது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் சந்திப்பு அல்ல" எனவும் தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்தார். (ரெசி-32)

# விடுமுறைக்காலத்தில் விசேட தபால் சேவை

தமிழ், சிங்களப் புத்தாண்டு மற்றும் ரமழான் ஆகிய நீண்ட வார விடுமுறை நாட்களில் தபால் பொருட்களை விநியோகிப்பதற்கான விசேட சேவையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை தபால் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த சேவை தொடர்பான அறிவிப்பை தபால் மா அதிபர் எஸ்.ஆர்.டபிள்யூ எம்.ஆர்.பி சத்குமார அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

அதன்படி பொது விடுமுறை தினமான ஏப்ரல் 12 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் உள்ள பிரிவுகளைக் கொண்ட தபால் அல்லது துணை தபால் நிலையங்கள் மூலம் பண விநியோகம், வெளிநாட்டு சேவை மற்றும் பொது பொதிகள் விநியோகம் ஆகியவற்றின் விசேட சேவை திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# ஆலயத்துக்குள் அத்துமீறிப் புகுந்த வாகனம் ஆலய மதில் சேதம் - காரைதீவில் சம்பவம்

(வி.ரி.சகாதேவராஜா)

இன்று அதிகாலையில் ஆலயத்துள் அத்துமீறி புகுந்து விபத்துக்குள்ளான வாகனத்தால் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இச்சம்பவம் இன்று அதிகாலை காரைதீவு விபுலானந்த சதுக்க முச்சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தால் காருக்கும் ஆலய மதிலுக்கும் சேதமேற்பட்டுள்ளது. கார்ச்சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

கொழும்பில் இருந்து கல்முனையைச் சென்றடைய வந்த கார் ஒன்றே வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

மோட்டார் வாகனமானது காரைதீவு பிரதான வீதி முச்சந்தியில் அமைந்திருக்கும் அரசடிப் பிள்ளையார் ஆலயத்தின் மதிலினை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றுள்ளது .

இந்த விபத்துத்தொடர்பான மேலதிக விசாரணைகளை காரைதீவு பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மின்சாரத் திருத்தச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது

*மின்சாரத் திருத்தச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.*

*அத்துடன், குறித்த சட்டமூலத்தை இந்த வார வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் இந்த மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். மேலும்குறித்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த தினத்தில் இருந்து 2 வாரங்களுக்கு அதனை சவாலுக்கு உட்படுத்த பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (04)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கட்டாக்காலி கால்நடைகள் மோதி வாகன விபத்து! தடுப்பதற்கான வழிமுறைகளும் சிந்தனைகளும்!



"கட்டாக்காலி கால்நடைகள் மோதி வாகன விபத்து!" – "தெருவில் நாயுடன் மோதி வீதி விபத்து!"

இப்படியான செய்திகளை நாம் பெரும்பாலும் அடிக்கடி பார்க்கிறோம். அண்மையில் கூட விபத்து நடந்து ஒருவர் இறந்தார். கால்நடைகள் இறந்தன.

இவ்வாறான விபத்துகள் குறிப்பாக இலங்கை மற்றும் இந்தியாவிலே இடம்பெறுகிறது. இவை போன்ற விபத்துகள் – சிங்கப்பூரில் இல்லை. நியூசிலாந்து, மாடுகள் அதிகம் உள்ள டென்மார்க், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் இல்லை.

இது சிந்திக்கவேண்டிய விடயம்!

சிலர் கூறுவர் வயிரவர் குறை, சனீஸ்வரர் குறை என்று. சமய நம்பிக்கைகள் பரிகாரங்களுக்கு நான் எதிரானவன் அல்ல. ஆனால், இதுபோன்ற மூடநம்பிக்கைகளுக்கு எதிர்தான்!

இந்தியாவில் சில இடங்களில் மொட்டந்தலையில் தேங்காய் உடைக்கிறாங்கள் – மண்டை உடைந்தால் தெய்வக்குற்றம் என்கிறார்கள் – என சினிமா ஊடாக சின்னக் கலைவாணரின் விழிப்புணர்வு பார்த்திருக்கிறோம்.

இங்கு சிலரால் சொல்லப்படும் தெய்வக்குற்றம் ஏற்கமுடியாதது! தெய்வக்குற்றம் கிரகப்பிழை ஆக இலங்கை, இந்தியாவில் மட்டுமா இருக்கு? அனைத்து நாட்டிலும்தானே கிரகமாற்றம் இருக்கும். அதைவிடமேலாக கடந்து உள்ளே இருப்பவரே கடவுள் (கட, உள்). அப்போ நாங்களே நம்மை தண்டிப்போமா?

இறை கருணை வடிவானது! அது எவரையும் எடைபோடுவதும் இல்லை – தண்டிப்பதும் இல்லை. சூரியன் இறைவனின் படைப்பு . இது படித்தவன், படியாதவன், பண்டிதன், பாமரன், ஆஸ்திகன், நாஸ்திகன் என்று பார்த்தா உதிக்கிறது? இல்லையே! அனைவரிற்கும் அல்லவா சமமாக அருளைக் கொடுக்கிறது. இறைவனின் படைப்பே இவ்வாறாயின் இறைவன் எவ்வளவு கருணை வடிவமாக இருக்க வேண்டும்?

இறைவன் நீதிபதி ஸ்தானத்திலிருந்து எம்மை எடை போடுவதுமில்லை. தண்டிக்குமாறு உத்தரவு இடுவதும் இல்லை. மாறாக மனிதன் தனது செயலால் உருவான கெட்ட கர்மாவால் துன்பப்படுவது மட்டுமல்லாது, அனைத்து ஜீவராசிகளுக்கும் சொந்தமான பூமிப்பந்தை தனது சுயநலத்திற்காக அழித்தும் வருகிறான். இதன் விளைவாகவே இயற்கை அவனைப் பல வழிகளில் அழிக்க முற்படுகிறது.

கர்ம விதிக்கும், நியூட்டனின் விதிக்கும் சிறு வித்தியாசம் இருக்கிறது.

நியூட்டனின் விதி- ஒவ்வொரு தாக்கதிற்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் உண்டு!

கர்ம விதி –

நீங்கள் எதை விதைப்பீர்களோ அதை அனுபவிப்பீர்கள், ஆனால் பல மடங்காக.

புரிதலுக்கு நன்றி. இனி விடயத்திற்கு வருவோம்.

வளர்முக நாடுகளில் கட்டாக்காலிகள் இல்லை அனைத்தும் முறைப்படி வளக்கிறார்கள்.

தீர்வு –

1. கட்டாக்காலிகளுக்கு பிரதேசவாரியாக மக்கள் குறைந்த பிரதேசங்களில் காப்பகங்கள் அவசியம் .

2. வீதிகளில் நாய்களை கொண்டுவந்து விடுவதைத் தவிர்க்கவேண்டும். மீறி விடுபவர்களுக்கு கடுமையான அபராதமும் தண்டனையும் கொடுக்க சட்டம் அவசியம். இதனால் பெண் குட்டி நாய்களை தெருவில் விடமாட்டார்கள்.

வீட்டு கால்நடைகளை தெருவில் விட்டால் அவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும் .



நான்கு வயதுச் சிறுவன் ஒருவன் தனது தாய், பெண் குட்டி நாய்களை தெருவில் விடச் சென்ற போது கேட்ட கேள்வி – 'ஏன் அம்மா நாய்க்குட்டிகளை தெருவில் விடப்போகிறீர்கள?

அதற்குத் தாயின் பதில் – 'இது பெட்டை நாய்களடா தம்பி, அவற்றை றோட்டில்தான் விடவேண்டும்! அது குட்டிகள் போட்டால் சிரமம்'.

'மகனின் பதில் கேள்வி – ' அம்மா, அக்காவும் பெண் பிள்ளை தானே? அவரையும் றோட்டில்தானே விடவேண்டும்?'

சிறுவனின் சிந்திக்க வேண்டிய கேள்வி! இது – பெண் நாய்களை தெருவில் விடுபவர்களுக்கு சமர்ப்பணம்.

அச்சிறுவன் வேறு யாரும் அல்ல. முத்தையா முரளிதரனின் 6 பந்துகளுக்கும், ஆறு சிக்சர்கள் அடித்த எனது மாணவரும், யாழ் பல்கலைக்கழக நண்பரும் சென் பற்றிஸ் கல்லூரி பழைய மாணவருமான சாஜகான் ஆவார்.

3. அதிகவேகத்தில் வாகனம் ஓட்டினால் வீட்டிற்கே அபராதம் வந்து சேரும்! வளர்முக நாடுகளின் போக்குவரத்து நிர்வாக ஒழுங்குகள் இங்கும் கொண்டுவரப்படவேண்டும். குறைந்தபட்சம் காவல் துறையினருக்கு நவீன கருவிகள் கொடுத்து அதிவேகமாக செல்லும் மற்றும் மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கையை அமுல்படுத்தினால் – எங்கை ஊதுபாப்பம்? – என்று கேட்கவும் தேவையில்லை அனைத்தையும் கருவி சொல்லும்.

4. குறிப்பாக ஊடகங்கள் ஊடகதர்மத்துடன் செயல்படவேண்டும்! சமூக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும், மனிதகுலம் மற்றும் இயற்கையைப் பாதுகாக்கும் செய்திகளைப் பகிர வேண்டும்.

மாறாக சில நாடுகள் போல் கட்சிக்கு ஒரு ஊடகம் தேவையில்லை. சமூக அக்கறையின்றி – தங்கள் கட்சியைப்பற்றிய சிலாகிப்பும், மற்றக்கட்சியைப்பற்றிய காழ்ப்புணர்வுமே அதிகம் பகிரப்படுகின்றன.

சில இடங்களில் மந்திரிகள், சில கட்சித் தலைவர்கள் இரவு போதையில் ஒரு அறிக்கை வெளியிட்டால், அது காலைப்பேப்பரில் கொட்டை எழுத்தில் முதல் பக்கத்தில் வரும்! பிறகு அவருக்கு தெளிந்தபின் காலை ஒரு மறு அறிக்கை – சொன்னதுபிழை என அளித்தால், அது மாலைப் பதிப்பில் முற்பக்கத்தில் அதேபோல் வரும்!

கல்விமான்கள் என்ற பெயரில் பசுத்தோல் போர்த்த புலிகள் கல்வி, சுகாதாரம், நிர்வாகங்களை நாசம் பண்ணுவார்கள்! அவர்களிடமே பணத்தை வாங்கி அவர்களுக்கே புகழாரம் சூட்டும் ஊடகங்கள் இன்றும் நாட்டில் உண்டு!

5. முடியுமான இடங்களில் வீதிகளைப் பெருப்பித்து இருவழிப்பாதையை கூடிய அளவு நடைமுறைப்படுத்தல். வாகன வேகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.

மேற்கூறியவற்றை பின்பற்றினால் கால்நடைகளாலும், பொதுவான வாகன விபத்துக்கள் வராமலும் தடுக்க முடியும். இது பொதுவாதே அன்றி அறுதியானதும் உறுதியானதும் முடிவானதும் அல்ல.

இங்குள்ள வேறு துறைசார் வல்லுநர்களின் கருத்துக்கள், ஆலோசனைகள், திருத்தங்கள் இருப்பின் தயங்காது கூறுங்கள்! அனைவருக்கும் உதவியாக இருக்கும்.

வாழ்வோம் அனைவரும், அனைத்து வளமுடனும்!
லோகா சமஸ்தா சுகினோ பவந்து
ஓம் சாந்தி, சாந்தி ,சாந்திகி... ஹரி ஓம்!

தியாகராஜா சத்தியேந்திரா
தனித்துவமான ஆன்மீகத் தலைவரும் வழிகாட்டியும்
ஆஸ்பத்திரி வீதி,
சிதம்பர நடராஜர் கோவில் மடம்,
சங்கானை.
தொ.பே.இல : 0761425768



# அரசாங்கத்தில் பதவி வகிப்போர் சிலர் நமது கூட்டணியை அரசாங்கத்தோடு சேரச் செய்யும் சூழ்ச்சியில் ஈடுபட்டனர்!

## சூழ்ச்சி வெற்றி பெறாது என்கிறார் முன்னாள் ஜனாதிபதி மைத்ரி

"எத்தனை தடைகள் வந்தாலும், எத்தனை இம்சைகள் நேர்ந்தாலும், நாங்கள் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம், நாங்கள் முன்னோக்கி செல்வோம், நாங்களே உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி வகிக்கும் சிலர் எமது பயணத்தை தடுக்கப் பார்க்கின்றனர், அவர்கள் நமது கூட்டணியை அரசாங்கத்தோடு சேரச் செய்வதற்கு முயல்கின்றார். கடந்த மூன்று நான்கு மாதங்களாக நமது பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைவதற்கு இதுதான் காரணம். அதனால்தான் அரசாங்கத்தில் பதவி வகிக்கும் மூன்று பேரை அண்மையில் கட்சியிலிருந்து நீக்கினோம். இது மிகவும் சட்டபூர்வமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாகும்"

கடுவெல குயின்ஸ்பரி ஹோட்டல் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை (06) மாலை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார். கட்சியின் புதிய பொருளாளரும் முன்னாள் மேல்மாகாண அமைச்சருமான ஹெக்டர் கெத்மகே இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால உட்பட ஏராளமான கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

மேலும் இங்கு கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி "ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடந்த காலங்களிலிருந்து பல்வேறு சவால்களை எதிர்கொண்ட கட்சி, ஆனால் அவற்றின் மூலம் கட்சியை தோற்கடிக்க முடியவில்லை. பண்டாரநாயக்கா இந்தக் கட்சியைக் கட்டியெழுப்பினார், சிறிமாவோ பண்டாரநாயக்க அதனைப் பலப்படுத்தினார். அவரது பிள்ளைகள் கூட இந்தக் கட்சியை விட்டுச் சென்றுவிட்டனர்.

நானும் இந்த கட்சிக்காக பல தியாகங்கள் செய்துள்ளேன், ஆகையினால் நம்மை வீழ்த்துவதற்கு ஒரு சிலர் சூழ்ச்சி செய்தாலும் அது வெற்றி பெறப்போவதில்லை. நாங்கள் தொடர்ந்து முன்னேறுவோம். உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அனைவரையும் எம்முடன் இணையுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால, பொருளாளர் ஹெக்டர் கெத்மகே ஆகியோரும் இங்கு உரையாற்றினர். (ரெசி-27)

# ரயில் பயணங்களுக்காக ஈ - டிக்கெட் அறிமுகமாகும்?

## ரெயில்வே பொது முகாமையாளர்



ரயில் பயணங்களுக்கு இலத்திரனியல் - அனுமதி சீட்டு (ஈ -டிக்கெட்) முறையை இந்த ஆண்டு இறுதிக்குள் அறிமுகப்படுத்த புகையிரத திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக திணைக்களத்தின் பொது முகாமையாளர் எச்.எம்.டபிள்யூ. பண்டார தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டமாக 19 மில்லியன் டொலர் செலவில் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், கடந்த சில காலமாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த இத்திட்டத்தின் பணிகளை துரிதப்படுத்துமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன பணிப்புரை விடுத்துள்ளார் என குறிப்பிட்டார். அதன்படி, திட்டப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதுடன், இதன் முதற்கட்ட நடவடிக்கையாக, அடுத்த ஐந்து மாதங்களுக்குள் ரயில்வே டிக்கெட்டுகளுக்கு ஞசு குறியீட்டை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெசி-23)

# தேங்காய் எண்ணெய் சந்தையை கட்டுப்படுத்துவதற்கு குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது



தேங்காய் எண்ணெய் இறக்குமதி மற்றும் விநியோகம் உட்பட தேங்காய் எண்ணெய் சந்தையை முழுமையாக ஒழுங்குபடுத்துவதற்கு குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, கைத்தொழில் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்கவும், தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யும் போது, தேங்காய் எண்ணெய்யை ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தை, தேங்காய் எண்ணெய் அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கவும் தீர்மானிக்கும் அமைச்சரவை தீர்மானம் வெளியிடப்பட்டுள்ளது.

தேங்காய் எண்ணெய் இறக்குமதிக்கு விதிக்கப்படும் வரி அளவு மற்றும் உள்நாட்டு நுகர்வு மற்றும் தொழில்துறைக்கு தேவையான தேங்காய் எண்ணெய்யின் அளவு ஆகியவற்றை தீர்மானிக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தேங்காய் எண்ணெய்யின் தரத்தைப் பாதுகாப்பதற்காக, தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளரையும், தேங்காய் எண்ணெய் போத்தல்களில் நிரப்பும் பாரிய நிறுவனங்களையும் இணைத்தவாறு தேங்காய் எண்ணெய் பாவனையாளர்கள் பாதுகாக்கக்கப்படும் வகையில் தயாரிப்புகளை விநியோகம் செய்தல் மற்றும் பொதியிடல் ஆகியவற்றிற்கான பொறிமுறையைத் தயாரிப்பதற்கான கட்டமைப்பொன்றை அமைப்பதற்கு தேவையான அதிகாரங்கள் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, உள்நாட்டு தேங்காய் எண்ணெய் தொழிற்துறையை ஒழுங்குபடுத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக, தினசரி 0.5 மெட்ரிக் தொன்களுக்கு மேல் கொள்ளளவைக் கொண்டிருக்கும் அனைத்து தேங்காய் எண்ணெய் உற்பத்தி தொழிற்சாலைகளும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெசி-25)




# புத்தாண்டு நாட்களில் 'குடி' இல்லை?

ஏப்ரல் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு விசேட அனுமதி பெற்ற மதுபான விற்பனை நிலையங்களை தவிர சில்லறையாக மதுபானம் விற்பனை செய்யும் அனைத்து கலால் அனுமதி பெற்ற மதுபானசாலைகளையும் எதிர்வரும் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் மூடுமாறு கலால் ஆணையாளர் நாயகம் உத்தரவிட்டுள்ளார்.

சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மூன்று நட்சத்திர தரத்திற்கு மேல் உள்ள ஹோட்டல்களில் தங்கியுள்ள சுற்றுலா பயணிகள் மற்றும் சிறப்பு புட்டிக் வில்லா உரிமம் பெற்ற இடங்களுக்கும் இந்த உத்தரவு பொருந்தாது, எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரெசி-28)

# புத்தாடைப் பொதிகள் அன்பளிப்பும் பயிற்சி நெறிக் கட்டணம் வழங்கலும்

(எம்.ஏ.றமீஸ்)

புனித நோன்புப் பெருநாளை சிறப்பிக்கும் வகையில் ‘அனைவரும் பெருநாளைக் கொண்டாடுவோம்’ எனும் தொனிப் பொருளின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு நாபீர் பவுண்டேஷன் மூலம் புத்தாடை அடங்கிய பெருநாள் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வேலைத் திட்டம் நாபீர் பௌண்டேஷனின் தவிசாளர் பொறியியலாளர் கலாநிதி உதுமான்கண்டு நாபீர் தலைமையில் அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெற்று வருகின்றன. குறித்த பெருநாள் பொதிகள் சம்மாந்துறை, மாளிகைக்காடு, நிந்தவூர், சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட குடும்பத்தவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள வருமானம் குறைந்த பல நூற்றுக்கணக்கான குடும்பத்தவர்களுக்கு இப்பெருநாள் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. புனிதம் மிகு நோன்புப் பெருநாளை அனைவரும் சிறப்புற கொண்டாடும் வகையில் பெறுமதி மிக்க புத்தாடைகள் அடங்கிய பொதிகள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. இதுதவிர, நிந்தவூர் பிரதேசத்தில் பள்ளிவாசல்களில் கடமை புரியும் மௌலவிமார்கள், முஅத்தின்மார்கள் போன்றோருக்கும் புத்தாடைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இந்நிகழ்வு நிந்தவூர் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது பெருந்தொகையானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாபீர் பௌண்டேஷனின் மற்றுமொரு உதவும் நிகழ்வான வருமானம் குறைந்த மாணவர்களும் தொழிற் கல்வியினை தடையின்றி பெற்றுக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், நிந்தவூர் மாவட்ட தொழிற் பயிற்சி நிலையத்தில் தையற் பயிற்சியினைத் தொடரும் ஒரு தொகுதி மாணவர்களுக்கு பயிற்சி நெறிக் கட்டணத்தினை குறித்த மாணவர்களுக்கு நாபீர் பௌண்டேஷனின் தவிசாளர் பொறியியலாளர் கலாநிதி உதுமான்கண்டு நாபீர் வழங்கி வைத்தார்.

மாவட்ட தொழிற் பயிற்சி நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் ஏ.ஏ.ஜாபீர் தலைமையில் நடைபெற்ற



இந்நிகழ்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர் பைஷல் காசிம் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# காஸா சிறுவர் நிதியத்துக்கு கல்லூரிகள் நிதி உதவி

(நூருல் ஜுதா உமர்)



கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம், கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் ஆகியோரின் வழிகாட்டலில் காஸா சிறுவர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி நிதியத்திற்கு கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நிதிப்பங்களிப்பில் மூன்று இலட்சத்து நாற்பத்தேழாயிரம் ரூபா நிதியினை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று (08) கல்முனை வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெற்றது.


கல்லூரியின் அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீமிடம் குறித்த தொகைக்கான கடிதத்தினை கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் முன்னிலையில் கையளித்தார்.

இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்), கல்லூரியின் பிரதி உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதைப்போன்றே காஸா சிறுவர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி நிதியத்திற்கான கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் பங்களிப்பாக 623,500 ரூபாவுக்கான ஆவணத்தை பாடசாலை அதிபர் எம்.ஐ. ஜாபீர் தலைமையிலான பாடசாலை குழாத்தினர் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீமிடம் குறித்த தொகைக்கான கடிதத்தினை கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் முன்னிலையில் கையளித்தனர் .




# மடத்தடி மீனாட்சி அம்மன் துவி அலங்கார உற்சவம் புதுவருடத்தில் ஆரம்பம்!



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் துவி வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் புதுவருடத்தில் 14 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது .

உற்சவகால பிரதம குரு சிவாகமவித்யா பூஷணம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் ஆலய குரு சிவஸ்ரீ ச.கோவர்த்தன சர்மா சமுகத்தில் வருஷாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்ச்சியாக ஒன்பது தினங்கள் பகல் அலங்கார உற்சவத் திருவிழாக்கள் இடம்பெற்று, எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சித்ராப் பௌர்ணமி அன்று தீர்த்த உற்சவத்துடன் திருவிழா நிறைவடைய இருக்கின்றது .

19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாற்குட பவனி இடம் பெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த பத்து நாள் அலங்கார உற்சவத் திருவிழாக்காலங்களில் காலை 10 மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகி பகல் ஒரு மணிக்கு அலங்கார உற்சவ பிரதான பூசை, அம்பாளின் வீதியுலா இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு தினமும் அன்னதானம் வழங்கப்படும்.

பத்து தினங்களுக்கான உற்சவகால திருவிழாக்களையும் அன்னதானத்தையும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களான சம்மாந்துறை விநாயகபுரம், பொத்துவில், ஆலையடி வேம்பு, நாவிதன்வெளி, கல்முனை, காரைதீவு, நிந்தவூர், திருக்கோவில் ஆகிய கிராமங்கள் பொறுப்பேற்று நடாத்துகின்றன.

# காலாவதியான பொருட்களை வைத்திருந்தமை தொடர்பில் 40 வர்த்தகர்கள் கைதாகியுள்ளனர்!

புத்தாண்டு காலத்தில் காலாவதியான பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்தமை மற்றும் விலைகளை காட்சிப்படுத்தாமை போன்ற குற்றங்களுக்காக 40 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் காலி மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர், நுகர்வோர் அதிகாரசபையின் புலனாய்வு அதிகாரிகள் ஊரகஹா, காலி, எல்பிட்டிய, அம்பலாங்கொட, ஹபராதுவ, பத்தேகம, நாகொட ஆகிய பிரதேசங்களில் மேற்கொண்ட விசேட நடவடிக்கைகளின் போதே இந்த வர்த்தகர்களை கைது செய்துள்ளனர்.

பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களில் பெரும்பாலானவை காலாவதியானவை எனவும், புத்தாண்டு காலத்தில் விதிமுறைகளை மீறும்



வர்த்தகர்களை கண்டறிய தொடர்ந்தும் சோதனை நடத்தப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ரெசி-29)

# கிராம சேவகர்களுக்கான அலுவலக மற்றும் எழுதுபொருள் கொடுப்பனவுகளை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை




கிராம சேவகர்களுக்கு வழங்கப்படும் அலுவலக கொடுப்பனவு மற்றும் எழுதுபொருள் கொடுப்பனவுகளை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. 2024 ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் அமுலாகும் வகையில் மாநகர சபை அல்லது நகர சபை எல்லைக்குள் மாதாந்த அலுவலக கொடுப்பனவு ஷரூ. 3000 ஆகவும், எழுதுபொருள் கொடுப்பனவு ஷரூ . 3000 ஆகவும் திருத்தப்பட்டுள்ளதென உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதித் தேவைகளை திறைசேரியிலிருந்து பெற்று கொடுப்பனவுகளை தாமதமின்றி வழங்க வேண்டும் எனவும், இது தொடர்பான உள்நாட்டலுவல்கள் சுற்றறிக்கை இலக்கம் 07ஃ2024 அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிராம கிராம சேவகர்களுக்காக முன்னர் வெளியிடப்பட்ட 2018 ஜுலை 23 என திகதியிடப்பட்ட உள்நாட்டலுவல்கள் சுற்றறிக்கை எண். 04ஃ2018 மற்றும் 2019 ஒகஸ்ட் 13 என திகதியிடப்பட்ட உள்துறை சுற்றறிக்கை எண். 21ஃ2019 ஆகியவற்றில் காணப்படும் ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ரெசி-30)



# சம்மாந்துறையில் சமுர்த்தி அபிமானி கண்காட்சியும் விற்பனை நிலையமும்

(சர்ஜ/ன் லாபீர்)

சம்மாந்துறை சமூர்த்தி வங்கிச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட சமுர்த்தி அபிமானி கண்காட்சியும் விற்பனையும் நேற்று (08) சம்மாந்துறை நகர மண்டபத்தில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனிபா தலைமையில் இடம்பெற்றது.

இக்கண்காட்சிக்கு மாவட்ட சமுர்த்திப்பணிப்பாளர் எம்.ஏ.சி அஹமது ஷாபீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் வங்கிச் சங்க முகாமையாளர், திட்ட முகாமையாளர், முன்னாள்தலைமை முகாமையாளர், கிராம சேவக நிர்வாக உத்தியோகத்தர், வங்கி முகாமையாளர்கள், வலய வங்கி உதவி முகாமையாளர்கள், வங்கி வலய கள உத்தியோகத்தர்கள், திட்ட உதவியாளர், சமுர்த்தி தலைமைகாரியாலய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச மட்ட வங்கி கட்டுப்பாட்டு சபைத் தலைவர்கள், வர்த்தக தலைவர் உறுப்பினர்கள், சமுர்த்தி உற்பத்தியாளர்கள், வங்கி வாடிக்கையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.









# தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மைக்ரோ டெவலப்மென்ட் இன்க் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

(எம் எப். நவாஸ்)

இலங்கையின்தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் மைக்ரோ டெவலப்மென்ட் இன்க். பங்குதாரர்களை ஒன்றிணைத்து, நேற்று 8 ஆம் திகதி, உபவேந்தர் அலுவலகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கையில் உள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கு ஒலியியல் விழிப்புணர்வு மற்றும் ஒலிப்பு கற்பிப்பதற்கான குறுகிய பாடநெறியை தொடர்வதற்கான முன்னேற்பாடாகவே குறித்த ஒப்பந்தம் அமைந்துள்ளது.

நிகழ்வின்போதுதென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் , பதில் பதிவாளர்எம்.ஐ. நௌபர், கலை மற்றும் கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில்ஆகியோருடன்ஆங்கில மொழித்துறை தலைவர் கலாநிதி எம்.ஐ.எப் கரீமா பேராசிரியர் ஏ.எம்.எம். நவாஸ், மற்றும்சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம். அப்துல் ரஹ்மான் மற்றும் விரிவுரையாளர் இசட். ஹூருல் பிர்தௌஸ், ஏ.ஆர். எப். றிஸ்னி சனோ உள்ளிட்ட குழுவினர் நேரடியாகவும் விரிவுரையாளர் எம்.ஏ.எம். சமீம் மற்றும் அவுஸ்திரேலியாவின் மைக்ரோ டெவலப்மென்ட் இன்க். இன் பிரதிநிதிகள் சூம் தொழிநுட்பத்தினூடாகவும் பங்கேற்றனர்.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கான டிஜிட்டல் கையொப்பம் ஏற்கனவே செய்யப்பட்டிருந்த நிலையில் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர்நேற்றுஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த உபவேந்தர், பாடநெறியில் காணப்ப டும் பல முக்கிய விஷயங்களை குறிப்பிட்டுக் கூறியதுடன் சமூகத்தில் உள்ள ஆங்கில ஆசிரியர்களிடையே நன்மை பயக்கும் வெளியீட்டைக் கொண்டு வருவது தற்போதைக்கு அவசியமானது என்பதையும் அவர் எடுத்துரைத்தார்.

துறைத் தலைவரும் பாடநெறியின் ஒருங்கிணைப்பாளருமான கலாநிதி எம்.ஐ.எப் கரீமா, பாடத்திட்டத்தைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் மற்றும் நன்மைகள் மற்றும் அதன் எதிர்கால முன்னேற்றம் ஆகியவற்றைக் குறிப்பிட்டார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.04.2024இல் வெளியிடப்பெற்றது.